**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 24.07.2025

**அசல் வழக்கு எண்.128/2014**

**பி.வா.சா.1 – பழனிசாமி, த/பெ.பெருமாள்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கு தாக்கல் செய்யும் பொழுது நீங்கள் என்னவாக இருந்தீர்கள் என்றால் கிராம நிர்வாக அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்று விட்டேன். உங்கள் அண்ணன் அமாவாசைக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் **1962**ல் திருமணம் நடைபெற்றது. இரண்டாவது அண்ணன் கங்காதரன் அவர்களுக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் **1973** இல் திருமணம் நடைபெற்றது. பாப்பாத்தி அம்மாளுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் **1955** இல் திருமணம் நடைபெற்றது. அப்பொழுது நான் சின்ன பையன். தேவகி என்பவருக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் அவர் அமாவாசையின் மனைவி ஆவார். அவருக்கு **1962**ல் திருமணம் நடைபெற்றது. அப்பாவுக்கும் அவருடன் பிறந்தவர்களுக்கும் தாத்தா சொத்து சம்பந்தமாக **1963**ஆம் ஆண்டிலேயே பாகப்பிரிவினை நடந்து விட்டது என்றால் சரிதான். அதில் உங்கள் தகப்பனாருக்கு ஏ செட்யூல் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதிலிருந்து அவர் அனுபவித்து வந்து சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். உங்கள் தகப்பனார் கிரயம் வாங்கிய சொத்துக்களில் அவரது வாரிசுகள் அனைவருக்கும் சம பாகம் உண்டு என்றால் சரிதான். அதேபோல் உங்கள் தாயார் பெயரில் சில சொத்துக்கள் கிரயம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அந்த சொத்துக்களிலும் ஐந்து பிள்ளைகளுக்கும் பாகம் உண்டு உங்களுக்கு ஐந்தில் ஒரு பாகம் உண்டு என்றால் சரிதான். உங்களுடைய தகப்பனார் அவருக்கு வந்த சொத்தில் இருந்து வந்த வருவாயைக் கொண்டு பிற சொத்துக்களை வாங்கினார் என்றால் சரிதான். அதில் உங்களுடைய பங்களிப்பு எதுவும் கிடையாது என்றால் சரிதான். நான்காம் பிரதிவாதிக்கு சொத்து எழுதியதாக சொல்கிறீர்கள் என்றால் ஆமாம்

எழுதியுள்ளார்கள். பார்த்தசாரதி பிள்ளை மற்றும் ராமதாஸ் பிள்ளை என்பவரிடமிருந்து கிரயம் வாங்கி சரோஜா பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார்கள். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் நகல் காப்பி வாங்கி தாக்கல் செய்துள்ளேன். அம்பத்தி ஏழு சென்ட் எழுதி வைத்துவிட்டதால் அவருக்கு பாகம் கிடையாது என்று சொல்கிறீர்களா என்றால் அதன் பிறகு பத்து ஏக்கருக்கு மேல் வாங்கி விட்டார்கள் ஆகவே பாகம் இல்லை என்று சொல்கிறேன். **10** ஏக்கருக்கு மேல் சொத்து வாங்கியதாக சொல்கிறீர்கள் அது அவருடைய தனிப்பட்ட வகையில் வாங்கிய சொத்து என்றால் சரியில்லை மேற்படி **57** செண்டு நிலத்திலிருந்து வந்த வருவாய் கொண்டு வாங்கியது ஆகும். பிரமாண வாக்குமூலத்தில் **57** செண்டு எழுதி கொடுத்து விட்டதால் வேறு சொத்து கிடையாது என்று சொல்கிறீர்களா என்றால் **2** வீடு கட்டிக் கொடுத்துள்ளேன் பம்பு செட்டு போட்டு கொடுத்துள்ளேன் பிள்ளைகளுக்கு தேவையான படிப்பு திருமண செலவுகளை செய்தோம். இரண்டு வீடு கட்டிக் கொடுத்ததாகவும் பம்பு செட்டு போட்டு கொடுத்ததாகவும் சொல்கிறீர்கள் நீங்கள் வாங்கி கொடுத்தீர்களா என்றால் அவர்களாகவே போட்டுக் கொண்டார்கள். நான் எதுவும் வாங்கிக் கொடுக்கவில்லை. **05.01.1985** கிராம நிர்வாக அதிகாரியாக பணிகள் சேர்ந்தேன் அதற்கு முன்பாக டிரைனிங் இருந்தது. **1985** ஆம் ஆண்டுக்கு முன்பாக உங்களால் குடும்பத்திற்கு எந்த வருமானமும் கிடையாது என்றால் கரும்பு விவசாயம் மற்ற விவசாயம் அனைத்தும் நான் தான் பார்த்து வந்தேன்.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.